போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 14, 1922.

ந. 3.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் பிப்ரவரி மீ 14உ. [விலை, 1 அணா.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின் ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னை சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகின்றன :—

BILL No. 6 OF 1922.

1922-ம் வருஷத்து 6-வது மசோதா ஆக்ட்.

A BILL TO AMEND THE COURT FEES ACT, 1870.

1870-ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

இந்த ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் 1870 ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1. (a) இந்த ஆக்டை, கோர்ட் கட்டண ஆக்டைத் திருத்துவதற்கான சென்னபட்டணத்து 1922-ம் வருஷத்திய ஆக்ட் என்று சொல்லலாம்.

(b) இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கிறது.

2. இந்த ஆக்டிலே, 'ஷை ஆக்ட்' என்பது - '1870 ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்ட்' என்று அர்த்தமாகும்.

3. ஷை ஆக்ட் 5-வது பிரிவின் இரண்டாவது பாராவில் 'கோர்ட் க்ளார்க்', 'முதல் ஜட்ஜால்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக முறையே 'ரெஜிஸ்ட்ரார்', 'சீவ் ஜட்ஜால்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

4. ஷை ஆகட் 7-வது பிரிவிலே, ‘இதன் பின்னல்’ என்னும் வார்த்தைகளுக்குமுன் ‘(1863-ம்௵த்து 20-வது ஆக்டாகிய) மதசம்பந்தமான இனங்களைக்குறித்த ஆக்ட் 14-வது பிரிவின்படியாவது 1908-ம்௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 91 அல்லது 92-வது பிரிவின்படியாவது பரிகாரத்துக்காக தொடரப்படும் வியாஜ்ஜியங்களிலன்றி மற்றப்படி’ என்னும் வார்த்தைகளை ச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

5. ஷை ஆக்ட் 7-வது பிரிவைச்சேர்ந்த (ii) குறிப்பிட்ட பகுதியில் ‘அந்த மதிப்புத் தொகையானது’ என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு ‘ஜீவனும்சத்தைக்குறித்த வியாஜ ஜியங்களிலே, ஒரு வருஷத்துக்குச் செலுத்தப்படத்தக்கதாய் தாவா செய்யப்பட்ட தொகையாகவும், இதர வியாஜ்ஜியங்களிலே’, என்னும் வார்த்தைகளையும் ‘பத்தத்தனை யாக’ என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக ‘பத்தத்தனையாகவும்’ என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

6. ஷை ஆக்ட் 7-வது பிரிவைச்சேர்ந்த (iv) குறிப்பிட்ட பகுதியில், (c), (d), (e) அடையாளமிட்ட உட்பகுதிகளை விட்டுவிடவேண்டும்; மேலும், (f) குறிப்பிட்ட உட்பகுதியை (c) குறிப்பிட்ட உட்பகுதியாக இலக்கமிடவேண்டும்.

7. 7-வது பிரிவிலே, அடியிற்கண்ட பகுதியை (iv) A குறிப்பிட்ட பகுதியாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

(iv) A (a) எதனாலே பிற்பாடு பரிகாரம் கேட்டுக்கொள்ளப்படுகிறதோ அப்படிப் பட்ட பரிஷ்காரமான டிக்ரி அல்லது உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கும்,

(b) இன்ஜங்ஷன் என்னும் கட்டளை பெறுவதற்கும்,

(c) யாதொரு டிக்ரி அல்லது இதர தஸ்தவேஜை ரத்து செய்வதற்காகவும்,

(d) (இதில் வேறேவிதமாக நிபந்தனை கண்டிராததாய்) நிலத்தில் உண்டாகும் யாதொரு பிரயோஜனத்தைப்பற்றிய பாத்தியதையைக்குறித்தும் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்திலே,

வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்புக்குத் தகுந்தபடி கணக்கேற்படுத்தப்படும்.

8. 7-வது பிரிவைச்சேர்ந்த (v) குறிப்பிட்ட பகுதியில்—

(a) அடையாளமிட்ட பகுதியிலே, ‘பத்தத்தனையாயிருப்பதாக’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாய் ‘இருபதத்தனையாயிருப்பதாக’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(b) அடையாளமிட்ட பகுதியிலே, ‘ஐந்தத்தனையாயிருப்பதாக’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘பத்தத்தனையாயிருப்பதாக’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

மேலும், (d) அடையாளமிட்ட உட்பகுதிக்குப் பிறகு, இப்போதுள்ள விலக்கு நிபந்தனைக்கு பர்த்தியாக அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

“ஆனல், வியாஜ்ஜியங்களுக்கு ஆசல் கட்டுவதைக்குறித்த 1887-ம்௵த்திய ஆக்ட் 3-வது பிரிவின்படி அதிகாரவரம்பின் காரியங்களுக்காக நிலத்தின் மதிப்பை நிச்சயிக்கும் பொருட்டு விதிகள் செய்யப்படும் பட்சத்தில், அப்படி நிச்சயிக்கப்பட்ட மதிப்பே இந்த பாராவின் காரியங்களுக்காக ஷை நிலத்தின் மதிப்பாய்க் கொள்ளப்படும்.”

9. ஷை ஆக்ட் 7-வது பிரிவின் (ix) குறிப்பிட்ட பகுதியின் கடைசியில் அடியிற்கண்ட பாராவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

“ஆனல், உரிமையைக்குறித்து நல்ல எண்ணத்துடன் விவாதம் ஏற்பட்டிருப்பதாக கோர்ட்டார் தீர்மானித்தால், அவர்கள் - முதல் விசாரணையின்போதாவது அதற்கு முன்னவது அந்த வியாஜ்ஜியத்தைக் கொதுவைவைக்கப்பட்ட சொத்தின் சுவாதீனமடைவதற்கான வியாஜ்ஜியமாக மதிப்பிடவேண்டுமென்று கட்டளையிடலாம்.”

10. அடியிற்கண்ட பிரிவை 7-A பிரிவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

7-A. பிரதிபலனுகக் கொடுக்கப்படும் தொகையின் விஷயமாய் கோர்ட்டாரின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டுமென்று 1894-ம்௵த்திய நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்ட் 18-வதுபிரிவின்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பமானது - விண்ணப்பதாரர் சுதந்தரித்துக் கேட்கும் தொகைக்கும் தீர்மானம்செய்து கொடுக்கப்பட்ட தொகைக்கும் வித்தியாசமாகவுள்ள தொகைக்கான வியாஜ்ஜியமாய் இந்த ஆக்டின் காரியங்களுக்காக எண்ணபபடும்; மேலும், ஷை விண்ணப்பத்திற்காகச் செலுத்தவேண்டிய கோர்ட் கட்டணமானது ஷை தொகையின்மேல் கணக்கிடப்படும்.

11. ஷை ஆக்ட் 11-வது பிரிவின் இரண்டாவது பாராவுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட பாராக்களை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு மூற்பட்ட ஒரு கால அளவில் ஷை சொத்து மூலமாகக் கிடைத்ததாய் பாத்தியமில்லாமல் அனுபவிக்கபபட்டுவந்திருக்கும் வருமானத்

தைக்குறித்து விசாரிக்குபடி யாதொரு டிக்ரியில் கட்டளையிட்டிருந்து, அந்தப்படி விசாரித்ததன்மேல் நிச்சயித்தறியப்பட்ட வருமானம் சுதந்தரித்துக்கேட்கப்படும் வருமானத்துக்கு அதிகமாயிருந்தால், வாஸ்தவமாய்ச் செலுத்தப்பட்ட கட்டணத்துக்கும் ஷெ வியாஜ்ஜியத்தில் அந்தப்படி நிச்சயித்தறியப்பட்ட வருமானம் முழுவதும் சேர்க்கப்பட்டிருந்தால் செலுத்தத்தக்கதாயிருந்திருக்கக்கூடிய கட்டணத்திற்கும் உள்ள வித்தியாசம் செலுத்தப்படுகிற வரையிலே அறுதியான டிக்ரி எதையும் ஜாரிசெய்யக்கூடாது. கோர்ட்டார் நிர்ணயிக்கிற காலத்துக்குள் அந்த அதிகப்படியான கட்டணம் செலுத்தப்படாவிட்டால், தாவா தள்ளிவிடப்படும்.

வியாஜ்ஜியம் தொடர்ந்ததிலிருந்து பாத்தியமில்லாமல் அனுபவிக்கப்பட்ட வருமானத்தைக்குறித்து விசாரிக்கும்படி யாதொரு டிக்ரியில் கட்டளையிட்டிருந்து, அந்தப்படி விசாரித்ததன் முடிவை அனுசரித்து அறுதியான டிக்ரி ஜாரிசெய்யப்பட்டால், நிறைவேற்றுகையில் சுதந்தரித்துக்கேட்கப்படும் தொகைக்காக பிரத்தியேகமாய் வியாஜ்ஜியம் தொடரப்பட்டிருந்தால் என்ன கட்டணம் செலுத்தத்தக்கதாயிருந்திருக்குமோ அந்தக் கட்டணம் செலுத்தப்படுகிறவரையில் டிக்ரியை நிறைவேற்றக்கூடாது.

12. ஷெ ஆக்ட், 18-வது பிரிவில் 'எட்டணா' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'ஒரு ரூபாய்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேணடும்.

13. ஷெ ஆக்டின் 1-வது, 2-வது ஷெட்யூல்களுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட ஷெட்யூல்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.—

1 – வது ஷெட்யூல்.

தொகையின்மேல் கட்டணம்.

இலக்கம்.		சரியான கட்டணம்.
1. *3-வது பிரிவிலும் இந்த ஷெட்யூலைச் சேர்ந்த 2-வது ஆர்ட்டிகிலிலும் கண்டிருப்பவைகள் தவிர, யாதொரு ஸிவில் கோர்ட்டுக்காவது ரெவினியூகோர்ட்டுக்காவது கொடுக்கப்பட்ட ப்ளெய்ன்ட் அல்லது [எதிர்க்கடன் அல்லது எதிர் தாவா உண்டென்று வாதிக்கிற விவரப்பத்திரிகை] அல்லது (இந்த ஆக்டிலே மற்றப்படி நிபந்தனை கண்டிராத) அப்பீல் யாதாஸ்து, [அல்லது குறுக்கு ஆட்சேபனை யாதாஸ்து].	விவாதத்தொகையாவது விவாத விஷயத்தின் மதிப்பாவது ஐந்து ரூபாய்க்கு மேற்படாவிட்டால்.	எட்டணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐந்து ரூபாய்க்கு மேற்பட்டால், நூறுரூபாய்வரையிலே ஐந்து ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐந்துரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	ஒன்பதணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு நூறுரூபாய்க்குமேற்பட்டால், ஆயிரம் ரூபாய்வரையிலே நூறு ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி பத்து ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	ஒரு ரூபாய் இரண்டணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், ஐயாயிரம் ரூபாய்வரையிலே ஆயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி நூறு ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	ஏழு ரூபாய் எட்டணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், பதினாயிரம் ரூபாய்வரையிலே ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி இருநூற்றைம்பது ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	பதினைந்து ரூபாய்.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், இருபதினாயிரம் ரூபாய்வரையிலே பதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐந்நூறு ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	இருபத்திரண்டு ரூபாய் எட்டணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு இருபதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், முப்பதினாயிரம் ரூபாய்வரையிலே இருபதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஆயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது	முப்பது ரூபாய்.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு முப்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், ஐம்பதினாயிரம் ரூபாய்வரையிலே, முப்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி இரண்டாயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	ஷெ.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால், ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐயாயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது.	ஷெ.

* வியாஜ்ஜியம் தொடருகையில் வாங்கத்தக்க சரியான கட்டணத்தை நிச்சயிப்பதற்கு, இந்த ஷெட்யூலைச்சேர்ந்த ஜாபிதாவைப் பார்க்க.

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

தொகையின்மேல் கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
2. *ராஜதானிப்பட்டணத்துக்கு வெளியே ஸ்மால்காஸ் அதிகாரத்தைச் செலுத்துகையில் யாதொரு கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட ப்ளெய்ன்ட், எதிர்க்கடன் அல்லது எதிர் தாவா உண்டென்று வாதிக்கிற விவரப் பத்திரிகை.	விவாதத் தொகையாவது விவாத விஷயத்தின் மதிப்பாவது ஐந்து ரூபாய்க்கு மேற்படாவிட்டால்.	ஆறணா.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐந்து ரூபாய்க்குமேற்பட்டால், நூறு ரூபாய்வரையிலே ஐந்து ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐந்து ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது.	ஷை.
	அந்தத் தொகை அல்லது மதிப்பு நூறு ரூபாய்க்கு மேற்பட்டால், ஐந்நூறு ரூபாய் வரையிலே நூறு ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி பத்து ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது.	பன்னிரண்டணா.
3. [1877-ம் வருஷத்து ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்டின் 9-வது பிரிவின்]படி ஸ்வாதீனத்திற்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் ப்ளெய்ன்ட்.	......	மேலே 1-வது ஆர்டிகிலில் தீர்மானிக்கப்பட்ட கட்டண வீதத்தில் சரி பாதியாயுள்ள தொகை.
4. தீர்மானத்தைப் புனராலோசனை பண்ணும்படிக்கான விண்ணப்பம் - டிக்ரி தேதி முதல் தொண்ணூறும் நாளையிலாவது அதற்குப்பின்டாவது கொடுக்கப்பட்டால்.	......	ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்துக்கு வாங்கத்தக்க கட்டணம்.
5. தீர்மானத்தைப் புனராலோசனை பண்ணும்படிக்கான விண்ணப்பம் - டிக்ரி தேதி முதல் தொண்ணூறும் நாளைக்கு முன்னமே கொடுக்கப்பட்டால்.	......	ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்துக்கு வாங்கத்தக்க கட்டணத்தில் பாதி.
6. டிக்ரியாயிராமலாவது டிக்ரியைப்போல செலாவணியாகாமலாவதிருக்கிற தீர்மானம் அல்லது உத்தரவுக்கு நகலாவது மொழிபெயர்ப்பாவது.	அப்படிப்பட்ட தீர்மானம் அல்லது உத்தரவு ஹைகோர்ட்டாரல்லாமல் வேறே யாதொரு ஸிவில் கோர்ட்டாராலாவது, யாதொரு ரெவினியூ கோர்ட் அல்லது ஆபிஸின் தலைமை உத்தியோகஸ்தராலாவது, வேறே யாதொரு நீதி பரிபாலன அல்லது நிர்வாக அதிகாரியினாலாவது செய்யப்பட்டால்—	
	(a) விவாதத் தொகை அல்லது விவாத விஷயத்தின் மதிப்பு ஐம்பது ரூபாயாகவாவது ஐம்பது ரூபாய்க்குக் குறைவாகவாவதிருந்தால்	ஆறணா.
	(b) அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டால்.	பன்னிரண்டணா.
	அப்படிப்பட்ட தீர்மானம் அல்லது உத்தரவு ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டால்.	ஒரு ரூபாய்.
7. டிக்ரி அல்லது டிக்ரியைப்போல செலாவணியாகிற உத்தரவுக்கு நகல்.	அப்படிப்பட்ட டிக்ரியாவது உத்தரவாவது ஹைகோர்ட்டாரல்லாமல் வேறே யாதொரு ஸிவில் கோர்ட்டாராலாவது யாதொரு ரெவினியூ கோர்ட்டாராலாவது செய்யப்பட்டால்,—	
	(a) எந்த வியாஜ்ஜியத்தில் அப்படிப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவு செய்யப்படுகிறதோ அந்த வியாஜ்ஜியத்தொகையாவது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பாவது ஐம்பது ரூபாயாகவாகிலும் ஐம்பது ரூபாய்க்குக்குக் குறைந்தாகிலுமிருந்தால்.	எட்டணா.
	(b) அந்தத் தொகை அல்லது மதிப்பு ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டால்.	ஒரு ரூபாய்.
	அப்படிப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவு ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டால்.	நாலு ரூபாய்.
8. 1879-ம் வருஷத்திய இந்துதேசத்து முத்திரைக் கடுதாசி ஆக்டின்படி முத்திரைத் தீர்வைக்குட்பட்ட யாதொரு தஸ்தாவேஜுக்கு நகலானது யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையின் கட்சிக்காரரால் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட அசலுக்கு பாத்தியாய்க் கொடுக்கப்பட்டால்	(a) அசலுக்கு வாங்கத்தக்க முத்திரைக் கடுதாசித் தீர்வை எட்டணாவுக்கு மேற்படாவிட்டால்.	அசலுக்கு வாங்கத்தக்க தீர்வைத்தொகை.
	(b) வேறே யாதொரு விஷயத்திலே ...	எட்டணா.

* வியாஜ்ஜியம் தொடருகையில் வாங்கத்தக்க சரியான கட்டணத்தை நிச்சயிப்பதற்கு, இந்த ஷெட்யூலைச் சேர்ந்த ஜாபிதாவைப் பார்க்க.

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

தொகையின்மேல் கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
9. இந்த ஆக்டிலே வேறே விதமாய் நிபந்தனை கண்டிராத யாதொரு ரெவினியூ அல்லது ஜுடிஷல் நடவடிக்கைக்கு அல்லது உத்தரவுக்கு நகலாவது, யாதொரு ஸிவில் - க்ரிமினல் அல்லது ரெவினியூ கோர்ட்டிலிருந்தாகிலும் ஆபிஸிலிருந்தாகிலும், ஒரு டிவிஷனில் நிர்வாக அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு பிரதான உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலிருந்தாகிலும் எடுக்கப்பட்ட யாதொரு கணக்கு - ஸ்டேட்மென்ட் - ரிபோர்ட் அல்லது அவ்விதமானதற்கு நகலாவது.	பிரதி முற்நூற்றறுபது வார்த்தைகளுக்காவது முந்நூற்றறுபது வார்த்தைகளுக்குக் குறைந்த சில்லறை வார்த்தைகளுக்காவது.	எட்டணா.
10. [(!890-ம் ஷூ 8-வது ஆக்டாகிய) கார்டியன்களையும் வார்டுகளையும் குறித்த ஆக்டினால் ரத்துசெய்யப்பட்டது.]		
11. மரண சாஸனத்தைக் கூட சேர்த்திருந்தாலும் சேர்த்திராவிட்டாலும் யாதொரு மரண சாஸனத்தின் ப்ரொபேட்டாவது லெட்டர்ஸ் ஆவ் அட்மினிஸ்ட்ரேஷன் என்னும் அதிகாரபத்திரமாவது.	எதன்விஷயமாய் ப்ரொபேட்டாவது லெட்டர்ஸாவது கொடுக்கப்படுகிறதோ அந்த சொத்தின் தொகை அல்லது மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டும் ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமலுமிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு இரண்டு வீதம்.
	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டும் பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமலுமிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்று வீதம்.
	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு ஐந்து வீதம்.
	ஆனால், யாதொரு ஆஸ்தியில் சேர்ந்த யாதொரு சொத்தின் விஷயமாக 18 9 ம் ஷூ ஸக்ஸெஷன் ஸெர்ட்டிபிகேட் ஆக்டின்படிக்காவது 1827-ம் ஷூ 8-ம் ந. பம்பாய் கோட் ரெகுலேஷன்படிக்காவது ஸெர்டிபிகேட் கொடுத்தான பிற்பாடு அதே ஆஸ்தியைப்பற்றி ப்ரொபேட் அல்லது லெட்டர்ஸ் ஆவ் அட்மினிஸ்ட்ரேஷன் கொடுக்கப்படுமாகில், அதற்காகச் செலுத்தப்படத்தக்க கட்டணமானது - முந்திய ஸெர் டிபிகேட்டுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் போக மிகுதியாகும்.	
12. 1889-ம் ஷூ ஸக்ஸெஷன் ஸெர்ட்டிபிகேட் ஆக்டின்படி கொடுக்கப்படும் ஸெர்ட்டிபிகேட்.	ஆக்டின் 8 வது பிரிவின்படிக்கான ஸெர்ட்டிபிகேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படும் ஐயாயிரம் ரூபாய்க்கு அ திகப்புடாமலுமிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு இரண்டு வீதமும், ஆக்டின் 10-வது பிரிவின் பிரகாரம் எதற்கு ஸெர்ட்டிபிகேட் வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்று வீதமும்.

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

தோகையின்மேல் கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
12. 1889-ம் வருஷத்து ஸக்ஸெஷன் ஸெர்ட்டிபிகேட் ஆக்டின்படி கொடுக்கப்படும் ஸெர்ட்டிபிகேட்—தொடர்ச்சி.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டும் பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமலுமிருந்தால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு மூன்று வீதமும், ஆக்டின் 10-வது பிரிவின் பிரகாரம் எதற்கு ஸெர்ட்டிபிகேட் வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு நாலரை வீதமும்.
	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பு பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டால்.	அப்படிப்பட்ட தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு ஐந்து வீதமும், ஆக்டின் 10-வது பிரிவின் பிரகாரம் எதற்கு ஸெர்ட்டிபிகேட் வியாபிக்கும்படி செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது பத்திரத்தின் தொகை அல்லது மதிப்பின்மேல் நூற்றுக்கு ஏழரை வீதமும்.
		குறிப்பு.—(1) கடன் தொகை என்பது ஸெர்ட்டிபிகேட்டில் கடனைச் சேர்க்கவேண்டியதென்று எப்போது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த தினத்தில் வட்டியும் சேர்ந்து எவ்வளவு தொகை ஆகிறதென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளக்கூடுமோ அவ்வளவு வரையில் அந்தத் தொகை என்று அர்த்தமாகும். (2) ஸெர்ட்டிபிகேட்டில் கண்ட யாதொரு பத்திரத்தின் விஷயமாய்

ஆக்டின்படி யாதொரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் கொடுக்கப்படாமலிருந்தாலும், அப்படிப்பட்ட அதிகாரம் அந்தப்படி கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் அது பத்திரத்தின்மேல் வரவேண்டிய வட்டி அல்லது பங்கு வீதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த பத்திரத்தைக் கைமாறச் செய்வதற்காகவாவது மாற்றுவதற்காகவாவது அவ்விரண்டு காரியங்களையும் செய்வதற்காகவாவது கொடுக்கப்பட்டிருந்தாலும். அந்த பத்திரத்தின் மதிப்பு என்பது - ஸெர்ட்டிபிகேட்டில் பத்திரத்தைச் சேர்க்கவேண்டியதென்று எப்போது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த தினத்தில் அந்த பத்திரத்தின் மார்கெட் எவ்வளவிருக்கிறதென்று நிச்சயமாயறிந்துகொள்ளக்கூடுமோ அவ்வளவு வரையில் அந்த மதிப்பென்று அர்த்தமாகும்.

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

வியாஜ்ஜியம் தொடருகையில் தொகையின்பேரில் விதித்து வாங்கத்தக்க கட்டண வீத ஜாபிதா.

(a) ராஜதானிப் பட்டணத்துக்கு வெளியே உள்ள ஸ்மால் காஸ் கோர்ட்டுகளில்

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்	சரியான கட்டணம்.		வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியிற் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
...	5	0	6	200	210	15	12
5	10	0	12	210	220	16	8
10	15	1	2	220	230	17	4
15	20	1	8	230	240	18	0
20	25	1	14	240	250	18	12
25	30	2	4	250	260	19	8
30	35	2	10	260	270	20	4
35	40	3	0	270	280	21	0
40	45	3	6	280	290	21	12
45	50	3	12	290	300	22	8
50	55	4	2	300	310	23	4
55	60	4	8	310	320	24	0
60	65	4	14	320	330	24	12
65	70	5	4	330	340	25	8
70	75	5	10	340	350	26	4
75	80	6	0	350	360	27	0
80	85	6	6	360	370	27	12
85	90	6	12	370	380	28	8
90	95	7	2	380	390	29	4
95	100	7	8	390	400	30	0
100	110	8	4	400	410	30	12
110	120	9	0	410	420	31	8
120	130	9	12	420	430	32	4
130	140	10	8	430	440	33	0
140	150	11	4	440	450	33	12
150	160	12	0	450	460	34	8
160	170	12	12	460	470	35	4
170	180	13	8	470	480	36	0
180	190	14	4	480	490	36	12
190	200	15	0	490	500	37	8

(b) இந்த ஷெட்யூலின் 1-வது ஆர்ட்டிகிளில் உதகரிக்கப்பட்ட வேறே ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டுகளில்.

ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
...	5	0	8	160	170	19	1
5	10	1	1	170	180	20	3
10	15	1	10	180	190	21	5
15	20	2	3	190	200	22	7
20	25	2	12	200	210	23	9
25	30	3	5	210	220	24	11
30	35	3	14	220	230	25	13
35	40	4	7	230	240	26	15
40	45	5	0	240	250	28	1
45	50	5	9	250	260	29	3
50	55	6	2	260	270	30	5
55	60	6	11	270	280	31	7
60	65	7	4	280	290	32	9
65	70	7	13	290	300	33	11
70	75	8	6	300	310	34	13
75	80	8	15	310	320	35	15
80	85	9	8	320	330	37	1
85	90	10	1	330	340	38	3
90	95	10	10	340	350	39	5
95	100	11	3	350	360	40	7
100	110	12	5	360	370	41	9
110	120	13	7	370	380	42	11
120	130	14	9	380	390	43	13
130	140	15	11	390	400	44	15
140	150	16	13	400	410	46	1
150	160	17	15	410	420	47	3

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

வியாஜ்ஜியம் தொடருகையில் தொகையின்பேரில் விதித்து வாங்கத்தக்க கட்டணவீத ஜாபிதா—தொடர்ச்சி

(b) இந்த ஷெட்யூலின் 1-வது ஆர்ட்டிகிலில் உதகரிக்கப்பட்ட வேறே ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டுகளில்—தொடர்ச்சி.

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்	சரியான கட்டணம்.		வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படாவிட்டால்	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
420	430	48	5	1,300	1,400	142	7
430	440	49	7	1,400	1,500	149	15
440	450	50	9	1,500	1,600	157	7
450	460	51	11	1,600	1,700	164	15
460	470	52	13	1,700	1,800	172	7
470	480	53	15	1,800	1,900	179	15
480	490	55	1	1,900	2,000	187	7
490	500	56	3	2,000	2,100	194	15
500	510	57	5	2,100	2,200	202	7
510	520	58	7	2,200	2,300	209	15
520	530	59	9	2,300	2,400	217	7
530	540	60	11	2,400	2,500	224	15
540	550	61	13	2,500	2,600	232	7
550	560	62	15	2,600	2,700	239	15
560	570	64	1	2,700	2,800	247	7
570	580	65	3	2,800	2,900	254	15
580	590	66	5	2,900	3,000	262	7
590	600	67	7	3,000	3,100	269	15
600	610	68	9	3,100	3,200	277	7
610	620	69	11	3,200	3,300	284	15
620	630	70	13	3,300	3,400	292	7
630	640	71	15	3,400	3,500	299	15
640	650	73	1	3,500	3,600	307	7
650	660	74	3	3,600	3,700	314	15
660	670	75	5	3,700	3,800	322	7
670	680	76	7	3,800	3,900	329	15
680	690	77	9	3,900	4,000	337	7
690	700	78	11	4,000	4,100	344	15
700	710	79	13	4,100	4,200	352	7
710	720	80	15	4,200	4,300	359	15
720	730	82	1	4,300	4,400	367	7
730	740	83	3	4,400	4,500	374	15
740	750	84	5	4,500	4,600	382	7
750	760	85	7	4,600	4,700	389	15
760	770	86	9	4,700	4,800	397	7
770	780	87	11	4,800	4,900	404	15
780	790	88	13	4,900	5,000	412	7
790	800	89	15	5,000	5,250	427	7
800	810	91	1	5,250	5,500	442	7
810	820	92	3	5,500	5,750	457	7
820	830	93	5	5,750	6,000	472	7
830	840	94	7	6,000	6,250	487	7
840	850	95	9	6,250	6,500	502	7
850	860	96	11	6,500	6,750	517	7
860	870	97	13	6,750	7,000	532	7
870	880	98	15	7,000	7,250	547	7
880	890	100	1	7,250	7,500	562	7
890	900	101	3	7,500	7,750	577	7
900	910	102	5	7,750	8,000	592	7
910	920	103	7	8,000	8,250	607	7
920	930	104	9	8,250	8,500	622	7
930	940	105	11	8,500	8,750	637	7
940	950	106	13	8,750	9,000	652	7
950	960	107	15	9,000	9,250	667	7
960	970	109	1	9,250	9,500	682	7
970	980	110	3	9,500	9,750	697	7
980	990	111	5	9,750	10,000	712	7
990	1,000	112	7	10,000	10,500	734	15
1,000	1,100	119	15	10,500	11,000	757	7
1,100	1,200	127	7	11,000	11,500	779	15
1.200	1,300	134	15	11,500	12,000	802	7

1-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

வியாஜ்ஜியம் தொடருகையில் தொகையின்பேரில் விதித்து வாங்கத்தக்க கட்டணவித ஜாபிதா—தொடர்ச்சி.

(b) இந்த ஷெட்யூலின் 1-வது ஆர்ட்டிகிளில் உதகரிக்கப்பட்ட வேறே ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டுகளில்—தொடர்ச்சி.

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்	சரியான கட்டணம்.		வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்பட்டு	அடியில் கண்டிருக்கிற தொகைக்கு மேற்படா விட்டால்	சரியான கட்டணம்.	
ரூ.	ரூ.	ரூ.	அ.	ரூ.	ரூ.	ரூ.	அ.
12,000	12,500	824	15	22,000	23,000	1,252	7
12,500	13,000	847	7	23,000	24,000	1,282	7
13,000	13,500	869	15	24,000	25,000	1,312	7
13,500	14,000	892	7	25,000	26,000	1,342	7
14,000	14,500	914	15	26,000	27,000	1,372	7
14,500	15,000	937	7	27,000	28,000	1,402	7
15,000	15,500	959	15	28,000	29,000	1,432	7
15,500	16,000	982	7	29,000	30,000	1,462	7
16,000	16,500	1,004	15	30,000	32,000	1,492	7
16,500	17,000	1,027	7	32,000	34,000	1,522	7
17,000	17,500	1,049	15	34,000	36,000	1,552	7
17,500	18,000	1,072	7	36,000	38,000	1,582	7
18,000	18,500	1,094	15	38,000	40,000	1,612	7
18,500	19,000	1,117	7	40,000	42,000	1,642	7
19,000	19,500	1,139	15	42,000	44,000	1,672	7
19,500	20,000	1,162	7	44,000	46,000	1,702	7
20,000	21,000	1,192	7	46,000	48,000	1,732	7
21,000	22,000	1,222	7	48,000	50,000	1,762	7

வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு 50,000 ரூபாய்க்கு மேற்பட்டால், ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பிரதி ஐயாயிரம் ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது—முப்பது ரூபாய்.

2-வது ஷெட்யூல்.

நிஷ்க்ரிஷையான கட்டணம்.

இலக்கம்.		சரியான கட்டணம்.
1. விண்ணப்பம் அல்லது மனு.	(a) கஸ்டம்ஸ் அல்லது சாயர்தீர்வையிலாகா உத்தியோகஸ்தரெவருக்காவது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸர்க்காரோடு சம்பந்தப்பட்டு காரியங்கள் நடத்திக்கொண்டிருக்கிறவரெவராலாவது கொடுக்கப்படும்போது, அப்படிப்பட்ட விண்ணப்பத்தின் விஷயம் அந்தக் காரியங்களுக்கே சம்பந்தப்படுமானால் ;	ஒரு அணா,
	அல்லது ஸர்க்காரிடத்திலே நேராய் உடன்பட்டு அங்காமியாய்ப் பைஸலான நிலத்தை அனுபவிக்கிறவரெவராலாவது யாதொரு லாண்ட் ரெவினியூ உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கப்படும்போது, அந்த விண்ணப்பம் அல்லது மனுவின் விஷயம் அந்த உடன்பாட்டுக்கே சம்பந்தப்படுமானால் ;	இரண்டணா.
	அல்லது யாதொரு பிரதேசத்தைச் சீராய் வைத்திருப்பதைக்குறித்தாவது விருத்திசெய்வதைக்குறித்தாவது அப்போதைக்கப்போது வழங்கிவருகிற யாதொரு ஆக்டின்படி யாதொரு மியுனிஸிபல் கம் ஷனருக்குக் கொடுக்கப்படும்போது, அந்த விண்ணப்பம் அல்லது மனுவானது அந்த சீர்திருத்தம் அல்லது விருத்திக்கும் மாத்திரமே சம்பந்தப்படுமானால் ;	ஒரு அணா.
	அல்லது அசல்விசாரணை அதிகாரமுடைய பிரதான ஸிவில் கோர்ட் தவிர வேறே யாதொரு ஸிவில் கோர்ட்டுக்காவது, 1887-ம் வருஷத்து 9-வது ஆக்டின்படி எற்படுத்தப்பட்ட யாதொரு ஸ்மால்காஸ் கோர்ட்டுக்காவது, கலெக்டர் அல்லது வேறே ரெவினியூ உத்தியோகஸ்தருக்காவது வியாஜ்ஜியத் தொகை அல்லது வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறைவாயிருக்கிற யாதொரு வியாஜ்ஜியம் அல்லது சங்கதி சம்பந்தமாய்க் கொடுக்கப்படும்போது ;	இரண்டணா.

2-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

நிஷ்கரிஷையான கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
1. விண்ணப்பம் அல்லது மனு—தொடர்ச்சி.	அல்லது யாதொரு ஸிவில், க்ரிமினல் அல்லது ரெவினியூ கோர்ட்டுக்காவது, யாதொரு போர்ட் அல்லது நிர்வாக அதிகாரிக்காவது, அந்தக் கோர்ட்டார், போர்டார் அல்லது அதிகாரியினால் செய்யப்பட்ட யாதொரு தீர்மானம், டிக்ரி அல்லது உத்தரவுக்காகிலும், அந்த கோர்ட் அல்லது ஆபிஸின் ரெகார்டிலிருக்கிற வேறே யாதொரு தஸ்தவேஜுக்காகிலும் நகல் அல்லது மொழிபெயர்ப்பு வாங்கும்பொருட்டுக் கொடுக்கப்படும்போது.	இரண்டணா.
	(b) க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் வாரன்டில்லாமல் பிடிக்கக்கூடிய குற்றம் தவிர வேறே யாதொரு குற்றத்தைக் குறித்த பிரியாது அல்லது குற்றச்சாட்டைக் கண்டெழுதி யாதொரு க்ரிமினல் கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது; அல்லது இந்த ஆக்டில் மற்றப்படி நிபந்தனை கண்டிராததாய், ஸிவில்-க்ரிமினல் அல்லது ரெவினியு கோர்ட்டுக்காவது, கலெக்டருக்காவது கலெக்டருக்குச் சமானமான அதிகாரமுடைய அல்லது கீழ்ப்பட்ட யாதொரு ரெவினியு உத்தியோகஸ்தருக்காவது, நிர்வாக அதிகார ஹோதாவிலே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்காவதுக் கொடுக்கப்படும்போது,	க்ரிமினல் பிரியாதின் விஷயத்தில் ஒரு ரூபாயும் மற்ற விஷயங்களில் பன்னிரண்டணாவும்.
	அல்லது கோர்ட்டிலே கிஸ்தி அல்லது குத்தகைத் தொகையைக் கட்டிவைப்பதற்காக; அல்லது நிலக்காரராவது வீட்டுக்காரராவது தம்முடைய வாடகைதாரருக்குச் செலுத்தவேண்டிய பிரதிபலன் தொகையைக் கோர்ட்டார் நிச்சயிப்பதற்காக.	எட்டணா.
	(c) இந்த ஆக்டில் மற்றப்படி நிபந்தனை கண்டிராததாய், சீவ் கம்மிஷனருக்காவது, மேல் விசாரணை அதிகாரமுடைய வேறே பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரிக்காவது, ரெவினியு அல்லது ஸர்க்யூட் கம்மிஷனருக்காவது யாதொரு டிவிஷன் நிர்வாக அதிகாரங்கொடுக்கப்பெற்ற யாதொரு பிரதான உத்தியோகஸ்தருக்காவது கொடுக்கப்படும்போது.	ஒரு ரூபாய் எட்டணா.
	(d) (i) ஒரு உத்தரவை புனராலோசனை பண்ணுவதற்காக 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 115 வது பிரிவின்படி ஹைகோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது—	
	(a) அந்த உத்தரவு எதற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையின் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாவிட்டால்;	ஐந்து ரூபாய்.
	(b) அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையின் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால்	பத்து ரூபாய்.
	(ii) அந்தப் பிரிவின்படிக்கன்றி மற்றப்படி ஹைகோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது.	இரண்டு ரூபாய்.
1 A. யாதொரு ஸிவில் கோர்ட்டுக்கு வேறொரு கோர்ட்டிலிருந்து ரெகார்டுகள் வரவழைக்கவேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பம்.	கோர்ட்டார் விண்ணபத்தின்படி உத்தரவு செய்து, அப்படிப்பட்ட ரெகார்டுகளை தபால் மூலமாய் அனுப்பவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால்.	இந்த ஷெட்யூலில் 1-வது ஆர்ட்டிகிலைச் சேர்ந்த (a) குறிப்பிட்டபகுதியின்படியாவது (b) குறிப்பிட்ட பகுதியின்படியாவது (d) குறிப்பிட்ட பகுதியின்படியாவது ஷை விண்ணப்பத்தின்மேல் விதிக்கப்பட்ட யாதொரு கட்டணத்துடன் சேர்த்து பன்னிரண்டணா.
2. பாபர் என்னும் ஏழையாக வியாஜ்ஜியம் தொடர அனுமதி கொடுக்கும்படி விண்ணப்பம்.	……	எட்டணா.

2-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

நிஷ்கரிஷையான கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
3. பாபராக அப்பீல் செய்து கொள்ள அனுமதி கொடுக்கும்படி விண்ணப்பம்.	(a) டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப் கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்பேது,	ஒரு ரூபாய்.
	(b) கம்மிஷனர் அல்லது ஹைகோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது.	இரண்டு ரூபாய்,
4. ...	**வீட்டுவிடப்பட்டது**	
5. அனுபோக சுதந்தரத்தை ஸ்தாபிக்கவாவது இல்லையென்று ருஜுப்படுத்தவாவது யாதொரு வியாஜ்ஜியத்திலே ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து, 6. 1898-ம௵த்திய க்ரிமினல் ப்ரொஸீஜா கோட் அல்லது 1908 ம௵த்து ஸிவில் பரொஸீஜர் கோடிலுள்ள எந்தப் பிரிவின்படியாவது யாதொரு கோர்ட்டார் அல்லது மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவின்படி கொடுக்கப்பட்டு இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிராத ஜாமீன்பத்திரம் அல்லது வேறே முச்சிலிக்கா, 7. இந்தியன் விவாகசம்பந்த நிவர்த்தி ஆக்ட் 49-வது பிரிவின்படி உத்தரவாதபத்திரம், 8. [(1891-ம௵த்து 12-வது ஆக்டாகிய) ரத்துசெய்வதற்கும் திருத்துவதற்குமான ஆக்டினுல் ரத்து.] 9. [1891-ம௵த்து 12-வது ஆக்டினுல் ரத்து.]	... ..	எட்டணா.
10. முக்தியார் நாமா அல்லது வகாலத்து நாமா.	எதாவது ஒரு கேஸை நடத்துவதற்காக—	
	(a) ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு ஸிவில் அல்லது க்ரிமினல் கோர்ட்டுக்காவது, யாதொரு ரெவினியு கோர்ட்டுக்காவது, யாதொரு கலெக்டர் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்காவது, இந்த இலக்கம் (b), (c) உட்பிரிவுகளில் கண்டிருக்கிறவர்கள் தவிர வேறே யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தருக்காவது கொடுக்கப்படும்போது;	ஒரு ரூபாய்.
	(b) ரெவினியு - ஸர்க்யூட் அல்லது கஸ்டம்ஸ் கமிஷனருக்காவது, பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரியல்லாத ஒரு டிவிழன் நிர்வாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தருக்காவது கொடுக்கப்படும்போது;	ஒரு ரூபாய் எட்டணா.
	(c) ஹைகோர்ட்டுக்காவது, பிரதான கமிஷனருக்காவது ரெவினியு போர்டுக்காவது மேலதிகாரமுடைய வேறே பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது;	இரண்டு ரூபாய்.
11. 1908-ம௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட், 47-வது பிரிவு அல்லது 144-வது பிரிவின்படி யாதொரு விஷயத்தைத் தீர்மானிக்கும் உத்தரவு அடங்க யாதொரு உத்தரவின்மேல் அப்பீல் செய்யப்பட்டால் அதற்காக இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிராமலிருந்து அது கொடுக்கப்படும்பொழுது அப்பீல் யாதாஸ்து.	(a) ஹைகோர்ட் தவிர வேறே யாதொரு ஸிவில் கோர்ட்டுக்காவது, ஹைகோர்ட் தவிர யாதொரு ரெவினியூ கோர்ட் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தருக்காவது மேலதிகாரமுடைய பிரதான ரெவினியூ அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது;	ஒரு ரூபாய்.
	(b) ஹைகோர்ட்டுக்காவது, பிரதான கம்மிஷனருக்காவது மேலதிகாரமுடைய வேறே பிரதான ரெவினியு அல்லது நிர்வாக அதிகாரிக்காவது கொடுக்கப்படும்போது;	இரண்டு ரூபாய்.

2-வது ஷெட்யூல்—தொடர்ச்சி.

நிஷ்கரிஷையான கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
12. கேவியாத் என்னும் மறியல் அல்லது முன்னெச்சரிக்கைப்பத்திரிகை.	......	பத்து ரூபாய்.
13.	விட்டுவிடப்பட்டது.	
14 கிருஸ்துமதத்தை அவலம்பித்த இத்தேசத்தவர்களுடைய விவாகசம்பந்த நிவர்த்தியைக் குறித்த 1866-ம் ௵த்திய ஆக்டின்படி யாதொரு வியாஜ்ஜியத்தில் மனு.	......	ஐந்து ரூபாய்.
15. [1908-ம் ௵த்து 5-வது ஆக்டினால் ரத்து.]		
16. [1889-ம் ௵த்து 6-வது ஆக்ட் 18-ம் பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவினால் ரத்து.]		
17. அடியிற்கண்ட (வகையான) வியாஜ்ஜியத்திலே ப்ளெய்ண்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து :— (i) லெட்டர்ஸ் பேட்டெண்ட் என்னும் அதிகார பத்திரத்தினால் ஸ்தாபிக்கப்படாத ஸிவில்கோர்ட்டுகளிலெதிலாவது யாதொரு ரெவினியு கோர்ட்டிலாவது செய்யப்பட்ட சுருக்கவகையான தீர்மானம் அல்லது உத்தரவை மாற்றவாவது தள்ளிவிடவாவது ; (ii) பேஷ்கஷ் செலுத்துகிற பூஸ்திதியின் சொந்தக்காரர்களுடைய பெயர்களை ரெஜிஸ்டரில் செய்திருக்கிற பதிவை மாற்றவாவது ரத்துசெய்யவாவது ;	......	பதினைந்து ரூபாய்.
(iii) (1863-ம் ௵த்து 20-வது ஆக்டாகிய) மதசம்பந்தமான இனங்களைக் குறித்த ஆக்ட் 14-வது பிரிவின்படியாவது 1908-ம் ௵த்து ஸிவில் ப்ரோஸீஜர் கோட், 91-வது அல்லது 92-வது பிரிவின்படியாவது பரிகாரத்துக்காக.	......	இருபது ரூபாய்.
17–A. (i) எதனாலே பின்பு பரிகாரங் கேட்டுக்கொள்ளப்படவில்லையோ அப்படிப்பட்ட பரிஷ்காரமான டிக்ரியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ;	அடியிற்கண்ட எந்த கோர்ட்டுக்காகிலும் ப்ளெய்ன்ட் கொடுக்கப்பட்டாலாவது அப்பீல யாதாஸ்தானது அந்த கோர்ட்டின் டிக்ரிக்கு விரோதமானதாயிருந்தாலாவது—	
(ii) தீர்மானத்தைத் தள்ளிவிடுவதற்கு ;	ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸிடி ஸிவில் கோர்ட் ;	பதினைந்து ரூபாய்.
(iii) செய்துகொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் ஸ்வீகாரமானது செலாவணியற்றதாகுமென்றாவது வாஸ்தவத்தில் செய்துகொள்ளப்படவேயில்லையென்றாவது ஒரு தீர்மானத்தைப் பெறுவதற்கு அல்லது யாதொரு ஸ்வீகாரம் செலாவணியாகுமென்று ஒரு தீர்மானத்தைப் பெறுவதற்கு.	ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஹைகோர்ட்.	அதிகாரவரம்பின் காரியங்களுக்காக மதிப்பு பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாயிருந்தால், நூறு ரூபாய் ; அந்த மதிப்பு பத்தாயிரம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் ஐந்நூறு ரூபாய்.

2-வது ஷெடயூல்—தொடர்ச்சி.

நிஷ்கரிஷையான கட்டணம்—தொடர்ச்சி.

இலக்கம்.		சரியான கட்டணம்.
17-B வேறே எந்த வியாஜ்ஜியத்திலே விவாதத்திலுள்ளவிஷயத்துக்கு ஒருரொக்க மதிப்பு போடமுடியாமலிருந்து, அதற்காக இந்த ஆக்டில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிராமலிருக்கும் பட்சத்தில், அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்திலும் ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து.	அடியிற்கண்ட எந்த கோர்ட்டுக்காகிலும் ப்ளெய்ன்ட் கொடுக்கப்பட்டாலாவது அப்பீல் யாதாஸ்தானது அந்த கோர்ட்டின் டிக்ரிக்கு விரோதமானதாயிருந்தாலாவது— ஒரு ரெவினியூ கோர்ட்; .. .. ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸிடி ஸிவில் கோர்ட்; ஒரு டிஸ்ட்ரிக்ட்-கோர்ட் அல்லது ஸப் கோர்ட்.	 பத்து ரூபாய். பதினைந்து ரூபாய். நூறு ரூபாய்.
18. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் இரண்டாவது ஷெட்யூலிற்கண்ட 17-வது அல்லது 20-வது பிரிவின்படிக்கான விண்ணப்பங்கள். 19. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸிஜர் கோடின்படி கோர்ட்டாரின் அபிப்பிராயத்துக்கு யாதொரு விவாதாம்சத்தை அனுப்புவதாகக் கண்ட எழுத்துமூலமான உடன்படிக்கை.	ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட் அல்லது ஸிடி ஸிவில் கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது. ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அல்லது ஸப்-கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும்போது.	பதினைந்து ரூபாய். நூறு ரூபாய்.
20. இந்தியன் விவாக சம்பந்த நிவர்த்தி ஆக்ட் 44-வது பிரிவின்படிக்கான மனுக்கள் தவிர அதே ஆக்டின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு மனுவும், அதே ஆக்ட் 55-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு அப்பீல் யாதாஸ்தும். 21. பார்ஸி விவாகத்தையும் விவாக சம்பந்த நிவர்த்தியையுங்குறித்த 1865-ம் வருஷத்திய ஆக்டின்படிக்கான ப்ளெய்ன்ட் அல்லது அப்பீல் யாதாஸ்து.	......	இருபது ரூபாய்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

பரிபாலனத்துக்காகப் பிடிக்கும் அதிகப்படியான செலவைச் சரிக்கட்டும்பொருட்டு, அதிகப்படியான வருமானத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாய்விட்டது. இந்த ராஜதானிக்காக கோர்ட் கட்டணங்களின் வீதப்பட்டியானது 1870-ம் வருஷத்தில் கோர்ட் கட்டண ஆக்டினால் நிச்சயிக்கப்பட்டது. இது சம்பந்தப்படும் பல வகுப்பு தஸ்தவேஜுகளின் விஷயத்தில், கோர்ட் கட்டணமாகச் செலுத்தத்தக்க தொகையானது அவைகளின் தன்மைக்கும் முக்கியதைக்கும் ஏற்றதாயில்லையென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகவே, கோர்ட் கட்டண ஆக்டைத் திருத்தியெழுதுவது யுக்தமாயிருப்பதாக தோற்றுகிறது; இந்த சமயத்திலே ஆக்டின் சொல்லமைப்பை ஸ்பஷ்டமாக்கும்பொருட்டு சில வார்த்தைகளில் மாறுதல்களும் செய்யப்பட்டிருக்கின்றன; ஆனால், ஒன்றுக்கொன்று முரண்படும் தீர்மானங்களைப் பொருத்தும்பொருட்டாவது ஆக்டின் பல பகுதிகளின் அர்த்தத்தைக் குறித்து ஏற்பட்டிருக்கும் சிக்கலான விஷயங்களைத் தீர்மானிக்கும்பொருட்டாவது ஆக்டைப் பொதுவாய்த் திருத்தியமைக்க யாதொரு பிரயத்தனமும் செய்யப்படவில்லை.

1922-ம் வருஷம் ஜனவரிமீ 29வ. கெ. ஸ்ரீனிவாஸய்யங்கார்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1921-ம்ஸூ டிஸெம்பர்மீ 30உ கவர்னரவர்களாலும், 1922-ம்ஸூ பெப்ரவரிமீ 1உ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகிறது :—

MADRAS ACT No. I OF 1922.

சென்னபட்டணம் 1922-ம்ஸூத்து 1-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

1920-ம்ஸூத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

சென்னபட்டணம் 1920-ம்ஸூத்து 5-வது ஆக்ட்.

1920-ம்ஸூத்து 5-வது ஆக்டாகிய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளைக்குறித்த திருத்துவதற்கான 1921-ம்ஸூத்து ஆக்டென்று சொல்லலாம்.

அர்த்தம் கூறும் பகுதி.

2. இந்த ஆக்டிலே, 'ஷை ஆக்ட்' என்பது - 1920-ம்ஸூத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்ட் என்று அர்த்தமாகும்.

பிரதான ஆக்ட் 12-வது பிரிவில் திருத்தம்.

3. (1) ஷை ஆக்ட் 12-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், 'பிரதி வருஷத்திலும் நவம்பர் மாதம் முதல் தேதிக்குப் பிறகு கூடும் முதல் சபையில்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(2) ஷை ஆக்ட் 12-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், 'இவர் உத்தியோகம் வகிக்கும் கால அளவானது அக்கிராசனாதிபதி உத்தியோகம் வகிக்கும் கால அளவு முடிவாகும்போதே முடிவாகும்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(3) ஷை ஆக்ட் 12-வது பிரிவைச் சேர்ந்த (7) குறிப்பிட்ட உட்பிரிவில், 'தமக்குப் பின் அந்த உத்தியோகத்தை . . . . நின்றுபோயிருக்கக்கூடாது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'தாம் மியுனிஸிபல் கௌன்ஸிலர் உத்தியோகத்திலிருக்கும் கால அளவு முடிந்துபோகிறவரையிலாவது மற்றப்படி தாம் கௌன்ஸில்ராயிருப்பது நின்றுபோகிறவரையிலாவது, அக்கிராசனாதிபதியின் விஷயத்திலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான விளம்பரம் வெளிவிடப்படுகிற வரையிலாவது உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டு, 'தெரிந்தெடுக்கப்பட்ட அக்கிராசனாதிபதியின் . . . . . உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்' என்னும் பாரா முழுவதையும் விட்டுவிடவேண்டும்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.